சார்பு நீதிமன்றம், பொன்னேரி
ஓ.எஸ்.எண். 18 / 2013
நாள் : 11/03/2020.

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | வா.த.சா.1. திரு. ரவி |
| வயது | : | |
| த/பெ | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| சாதி | : | |
| விலாசம் | : | |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் என்னுடைய தங்கையான வாதி பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு தமிழ் எழுதப் படிக்கத்தெரியுமா என்றால் நன்றாகத் தெரியும் ஆங்கிலம் தெரியுமா என்றால் தெரியாது. கையொப்பம் மட்டும் ஆங்கிலத்தில் இடத்தெரியும் நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் 6வது பிரதி வாதி மல்லீஸ்வரி உறவினரா என்றால் இல்லை. இவ்வழக்கினை நடத்த மற்றும் சாட்சி சொல்ல மேற்படி மல்லீஸ்வரி எனக்கு அதிகாரம் ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 6ம் பிரதிவாதி மல்லீஸ்வரி சார்பாக சாட்சி அளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் 6வது பிரதிவாதி மல்லீஸ்வரிக்கு சில சொத்துக்களை விற்றதாக சொல்வது பெயர் அளவில் விற்பனை செய்தது என்று சொன்னால் சரியல்ல. நான்விவசாயக்கடன்களை அடைப்பதற்காக 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தேன். மேற்படி விவரத்தை என்னுடைய பதில் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தற்போது வழக்கிற்காக பின்னிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா அட்டவணை ஏ சொத்தின் அயிட்டம் எண்.1ல் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் என்னுடைய அப்பா அருணாச்சல முதலியாரின் முன்னோர்கள் மூலம் கிடைப்பபெற்ற சொத்து என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா சுயமாக சம்பாதித்த சொத்தாகும். என் அப்பா சுயமாக சம்பாதித்ததற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் அதற்கான ஆவணங்கள் எங்களிடம் உள்ளது. நான் என்னுடைய பதிலுரையில் அயிட்டம் 1 ஏ செட்யூலில் உள்ள சொத்துக்களை என்னுடைய தகப்பனார் எந்த தேதியில் யாரிடமிருந்து எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றார் என்ற விவரங்களை சொல்லயுள்ளேனா என்றால் இல்லை ஆனால் ஆதாரம் உள்ளது. மேற்படி அயிட்டம் 1 கூட்டுக்குடும்ப சொத்துக்கள் முன்னோர் சொத்துக்கள் என்பதால்தான் என்னுடைய தகப்பனார் மேற்படி சொத்துக்களை எவ்வாறு அடைந்தார் என்று பதிலுரையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வாதசாஆ1 ஆவணம் செட்டில்மெண்ட பத்திரம் என்னுடைய தகப்பனார் எனக்கு எழுதிவைத்தாக சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு வாதசாஆ1 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைப்பதற்கான மூலப்பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வாதசாஆ1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னுடைய தகப்பனார் அவருக்கு

பிதுராஜ்யமாக மற்றும் சுயார்ஜிதமாக கிடைக்கப்பெற்ற சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் 2006ம் வருடம் இறந்துவிட்டார். எனது தகப்பனாருக்கு எழுத படிக்கத்தெரியாது. கைரேகைதான் வைப்பார். என்னுடைய தகப்பனார் எதனால் இறந்துவிட்டார் என்றால் அவர் புளியமரத்தில் இருந்து கீழே விழுந்து முதுகு எலும்பு முறிவு ஏற்பட்டு அதன்பிறகு குணமடைந்து நன்றாக இருந்தார் பிறகு இயற்கை மரணம் அடைந்துவிட்டார். அவருக்கு அண்ணாநகரில் உள்ள பிரகாஷ் மருத்துவமனையில் எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை செய்தோம். அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனாருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு படுத்த படுக்கையாக சுய நினைவு இல்லாமல் இருந்து பிறகு இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் எழுதுவதற்கான அசல் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை தேவைப்படாததால் நான் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் செட்யூல் ஏ-யில் அயிட்டம் 2ல் காட்ப்பட்டுள்ள சொத்துக்கள் யார் பெயரில் எப்படி வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியும். சுகுகுட்டி முதலியார் மகன் நாராயணசாமி முதலியார் என்பவரிடம் இருந்து 1910ம் வருடம் எழுதி வைக்கப்பட்ட உயில் மூலமாக என்னுடைய தாத்தா ராஜீ முதலியாருக்கு கிடைக்கப்பெற்று அதன்பிறகு என்னுடைய அப்பாவிற்கு கிடைத்தது. மேற்படி விவரத்தை என்னுடைய பதிலுரை மற்றும் பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் தேவைப்படவில்லை அதனால் சொல்லவில்லை. மேற் குறிப்பிட்ட உயில் சாசனம் உள்ளதா என்றால் என்னிடம் உள்ளது. அதை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்படவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. அட்டவணை ஏ சொத்தில் அயிட்டம் 2வது சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்தானது நடேச முதலியாருக்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தந்தை அருணாச்சல முதலியாரின் தந்தை பெயர் ராஜி என்கிற செல்லப்ப முதலியா. நடேச முதலியார் என்பவர் ராஜி முதலியாருக்கு என்ன உறவு முறை என்றால் தம்பி மகன் ஆவார். நடேச முதலியாரின் மனைவி பெயர் ரோஜாம்மாள் அவர்களுக்கு குழந்தைகள் ஏதும் இல்லை. நடேச முதலியார் இறந்த பிறகு அவருடைய சொத்துக்கள் ரோஜாம்மாளுக்கு சொந்தமானது. வாதி தாக்கல் செய்துள்ள தாவாவில் அயிட்டம் 2 சொத்து நடேச முதலியாருக்கு பிறகு ரோஜாம்மாளுக்கு சொந்தமானது என்று கூறியுள்ள விவரத்தினை நான் மறுத்து பதிலுரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி அயிட்டம் 2 ஏ அட்டவணை சொத்துக்கள் ராஜி முதலியாருக்கு உயில் மூலமாக கிடைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1980ம் வருடத்திற்கு முன்பே நடேச முதலியார் இறந்துவிட்டார். அவருடை அவருடைய மனைவி ரோஜாம்மாள் யாருடைய பாதுகாப்பில் இருந்தார் என்றால் அவருடைய வீடு இருந்தது அவர் தனியாகத்தான் இருந்தார். மீண்டும் சாட்சி மாற்றி மேற்படி ரோஜாம்மாள் அவர் கணவர் இறந்த பிறகு என்னுடைய தகப்பனாரின் பாதுகாப்பில் இருந்தார் என்று சொல்கிறார். மேற்படி ரோஜாம்மாள் அவரது தேவைகளுக்கு என்னுடைய அப்பாவிடம் நிலத்தை குத்தகைக்கு கொடுத்த அதில் இருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு அவரது தேவைகளை பூர்த்தி செய்துக்கொண்டார். இந்த விவரத்தையும் என்னுடைய பதிலுரையில் சொல்லவில்லை என்று சென்னால் சரிதான். என்னுடைய அப்பா உயிருடன் இருந்த கால கட்டத்தில் அயிட்டம் 2 ஏ அட்டவணை சொத்தை என்னுடைய அப்பாவிற்கு ரோஜாம்மாள் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதசாஆ 1 மற்றும் 2 செட்டில்மெண்ட் ஆவணங்கள் நானும் என்னுடைய தம்பியும் என்னுடைய அப்பாவையும் அழைத்துச்சென்று எழுதி பதிவு செய்தோம். மேற்படி வாதசாஆ1 மற்றும் 2 ஆவணத்தை யார் தயாரித்தது என்றால் ஞானம் என்பவர் தயார் செய்தார். மேற்படி ஞானம் என்பவர் எனக்கு தெரிந்தவர் அவரிடம்தான் நான் பத்திரங்கள் எழுதுவேன்.

வாதசாஆ 1 மற்றும் 2 ஆவணங்களை தயார் செய்யும்போது எங்கள் மூவரைத்தவிர வேறு யாராவது அழைத்துச்சென்றீர்களா என்றால் சாட்சிகளை அழைத்துச்சென்றேன்.
வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி,
பொன்னேரி.